## 13. அடக்கம் உடைமை

121. *அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை*
*ஆரிருள் உய்த்து விடும்*

**அடக்கம் உயர்வளித்து**
**அனைத்துப் புகழையும் தந்து தேவனாக்கும் !**
**அடங்காமை இருள் போன்ற துன்பத்தில்**
**அடக்கி விடும் !**

122. *காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்*
*அதனினூஉங் கில்லை உயிர்க்கு*

**காக்க காக்க**
**காலமெல்லாம் அடக்கத்தை உறுதியுடன் காக்க !**
**ஆருயிருக்கு என்றும் மேன்மையான**
**ஆக்கம் தருவது அடக்கம்ஒன்றே !**

123. *செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்*
*தாற்றின் அடங்கப் பெறின்*

**அறிய வேண்டியவைகள் அனைத்தையும்**
**அறிந்து அடங்கி நடந்தால் . அந்த**
**அடக்கம் அனைவராலும்**
**அறியப்பட்டு பாராட்டுப் பெறும் !**

124. *நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்*
*மலையினும் மாணப் பெரிது*

**எந்த நிலையிலிருந்தும் மாறாமல்**
**என்றென்றும் அடங்கி வாழ்பவன்**
**எட்டும் உயர்வு – வானத்தை**
**எட்டிப்பார்க்கும் மாமலையைவிட உயர்வானது !**

125. *எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்*
*செல்வர்க்கே செல்வம் தகைத்து*

**பணிவு என்னும் பண்பு என்பது**
**பலருக்கும் ஓர் செல்வமாகும் – அது**
**பணம் படைத்த செல்வர்களுக்கோ அந்த**
**பண்பு மேலும் ஒரு செல்வத்துள் செல்வமே !**

*126.* *ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்*
*எழுமையும் ஏமாப் புடைத்து*

**இருக்கின்ற உறுப்புகளையெல்லாம்**
**இழுத்து ஓர் ஓட்டுக்குள் அடக்கும் ஆமை போல்**
**இப்பிறவியில் ஐம்பொறிகளை அடக்கி வாழ்ந்தால்**
**இனி வரும் ஏழு பிறப்பிற்கும் அதுவே காவல் !**

*127.* *யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு*

**எதைக் காக்க முடியாவிட்டாலும் ஒருவர்**
**எப்படியாயினும் நாவை அடக்க வேண்டும் ! – இல்லை**
**எனில் அவர் உதிர்த்த சொல்லே**
**எங்ஙனமும் துன்பத்தில் தள்ளி விடும் !**

*128* *ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்*
*நன்றாகா தாகி விடும்*

**உதிர்த்த சொற்கள் அனைத்தும்**
**உயர்ந்த சொற்களாயினும் – அதில்**
**உறுத்தலாய் ஒரே ஓர் தீய சொல்**
**உட்புகுந்தால் உள்ளது அனைத்தும் கெட்டுவிடும் !**

*129.* *தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினாற் சுட்ட வடு*

**நெருப்பினால் சுட்ட புண் வெளியில்**
**நெருடலாய் தழும்பு தெரிந்தாலும் ஆறிவிடும் !**
**வெறுப்பினால் திட்டிய சொற்கள் உள்ளே நிரந்தரமாய்**
**வெந்த புண்ணாய் மனதில் வடுவாகும் !**

*130.* *கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி*
*அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து*

**கற்பவை எல்லாம் கற்று –**
**கடுங்கோபத்தையும் காத்து –**
**அடக்கம் கொண்ட பண்பாளரை**
**அடையவே தவம் கிடக்குமாம் அறம் !**